புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மார்ச் 17, 2022 | புரட்சி 21 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00

## சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்

# தில்லை தீட்சதர்களை கைது செய்க!

*தில்லை சிற்றம்பல மேடையில் தலித் 'பெண்' வழிபாட்டு உரிமையைத் தடுத்து நிறுத்திய தீட்சதர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டும் அவர்கள் கைது செய்யப்படவில்லை. தீட்சதர்களை சட்டப்படி கைது செய்யக் கோரியும், நடராசன் கோயிலை அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வற்புறுத்தியும் சென்னையில் மார்ச் 11, 2022 பகல் 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

ஆர்ப்பாட்டத்தில் பேசிய பலரும் எங்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை; ஆனால் நம்பிக்கையாளர்கள் உரிமைகளைத் தடைப்படுத்துவதை மனித உரிமைக் கண்ணோட்டத்தில் கண்டிக்கிறோம் என்று குறிப்பிட்டனர். மனித உரிமைகளுக்கு எதிராக நம்பிக்கைகள் திணிக்கப்படும்போது அதை கண்டிக்கிறோம். தில்லையில் தலித் பெண் சிற்றம்பல மேடையில் வழிபடுவது அவரது மனித உரிமை; அதைத் தடுப்பது தீண்டாமைக் குற்றம்; மனித உரிமைக்கு எதிரானது; தமிழில் பாடுவது மனித உரிமை; அதைத் தடுப்பது மனித உரிமைக்கு எதிரானது; ஹிஜாப் அணிவதும் அணிய விரும்பாததும் அவர்கள் மனித உரிமை; அதைத் தடை செய்வது மனித உரிமை மீறல் என்று பலரும் விளக்கினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், தில்லை நடராசன் கோயில் தங்களுக்கு மட்டுமே உரித்தானது என்று தீட்சதர்கள் சொந்தம் கொண்டாட உரிமையில்லை. அது மக்கள் வரிப் பணத்தில் மன்னர்கள் கட்டிய கோயில் என்று கூறியதோடு, இது தொடர்பாக நீதிமன்றத்தில் வந்த வழக்குகளை சுட்டிக் காட்டினார்.

தில்லை கோயிலில் 3000 தீட்சதர்கள் சிவபெருமானோடு தேவலோகத்திலிருந்து வந்த 'பூதேவர்கள்' என்ற வாதத்தை உச்சநீதிமன்றமே ஏற்றுக் கொண்டதை சுட்டிக் காட்டினார். மத சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக்கும் 25, 26ஆவது பிரிவுகளை அரசியல் சட்டத்தில் சேர்க்க காஞ்சிபுரம் மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சாமி மேற்கொண்ட திரைமறைவு முயற்சிகளை விளக்கிக் கூறினார். காஞ்சி சங்கராச்சாரியாருடன் நெருக்கமாக இருந்த அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரி எழுதிய 'சங்கரா அன்ட் சன்மதா' என்ற நூலை கலைமகள் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. அதில் நாடாளுமன்றக் குழு வினரை சென்னை 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் ஒரு தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்து, சங்கராச்சாரி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வரவழைத்தார். 'இந்து' ஆசிரியர் கஸ்தூரி சீனிவாசன், இதற்கு ஏற்பாடு செய்தார். சங்கராச்சாரி பிரதிநிதியாக தாத்தாச்சாரி இதில் பங்கேற்றார். மதத்தை அடிப்படை உரிமையில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பிறகு இங்கிலாந்திலிருந்து சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் குழு இந்தியா வந்தபோது சங்கராச்சாரி தூதர்கள் அவர்களிடமும் இதே கருத்தை நேரில் வலியுறுத்தினர். சட்டம் இயற்றப் போவது நாங்கள் அல்ல; நாங்கள் சுதந்திரம் தருவது பற்றி ஆலோசிக்கவே வந்துள்ளோம் என்று கிரிப்ஸ் குழு கூறி விட்டது. பிறகு சட்ட நிபுணர்களைக் கொண்டு மதத்தை அடிப்படை உரிமையில் சேர்த்ததோடு மட்டுமின்றி, மதத்துக்குள் உள்ள ஒவ்வொரு தனித் தனிப் பிரிவும் (denomination) அதன் உட்பிரிவுகளும் (any section there of) அடிப்படை உரிமையின் கீழ் கொண்டு வந்த ஒரு வரைவை தயாரித்தார் சங்கராச்சாரி. பிறகு அரசியல் வரைவுக் குழுவை ஏற்க வைத்தார். இந்த உரிமை மாநிலப் பட்டியலுக்கு போய்விடக் கூடாது; ஒன்றிய அரசுப் பட்டியலில் இடம் பெற வேண்டும் என்று நேருவையே பணிய வைத்தார் என்று பதிவு செய்திருக்கிறார் தாத்தாச்சாரி. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை, தில்லை கோயில் தீட்சதர் என்ற தனிப் பிரிவினருக்கு மட்டுமே சொந்தமானது என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இந்தப் பிரிவுகளே காரணமாக இருக்கின்றன என்று விளக்கினார் விடுதலை இராசேந்திரன்.




தேவாரம் திருவாசகத்தை தில்லை கோயிலுக்குள் முடக்கி பூட்டுப் போட்டார்கள் தீட்சதர்கள். அழியும் நிலையிலிருந்த அந்த ஓலைச் சுவடிகளை மீட்க ராஜராஜன் சென்றபோது அப்பர், சம்பந்தர், ஞானசம்பந்தர் நேரில் வந்தால்தான் தருவோம் என்று அடம் பிடித்தனர் தீட்சதர்கள். பிறகு இராஜ ராஜசோழன் அவர்கள் சிலைகளைக் கொண்டு வந்து காட்டி ஓலைச் சுவடிகளைக் கேட்டபோது சிலைகளை ஏற்க மாட்டோம்; நேரில் வரவேண்டும் என்று மீண்டும் அடம் பிடித்தபோது கதவை உடைத்து தேவாரம், திருவாசகத்தை மீட்டெடுத்து இராஜராஜசோழன் பதிப்பித்த கதையை இராஜராஜசோழன் திரைப்படம் கூறியதையும் பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

ஆர்ப்பாட்டத்தில், மக்கள் அதிகார மாநிலப் பொருளாளர் அமிர்தா தலைமை வகித்தார். தமிழ்த்தேச மக்கள் முன்னணி செந்தில், தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் குமரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா - லெ) ரெட் ஸ்டார் இயக்கத்தின் மாவட்ட அமைப்புச் செயலாளர் கார்க்கி வேலன், புரட்சிகர இளைஞர் முன்னணி சீராளன், தமிழ்தேசிய விடுதலை இயக்கம் மகிழன், மக்கள் அதிகாரம் மாநில செயலாளர் வெற்றிவேல் செழியன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மயிலை சுகுமார் ஆகியோருடன் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# தில்லை நடராசன் கோயில் மோசடிகள் – சந்தித்த வழக்குகள்

*தில்லை நடராசன் கோயில், தீட்சதர்களின் தனிச் சொத்தாகவே இதுவரை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்போடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கோயில் பரப்பு 40 ஏக்கர்; 2700 ஏக்கர் நிலம்; பல கோடி மதிப்புள்ள நகைகள்; உண்டியல் வசூல் அனைத்துமே தீட்சதர்கள் கட்டுப்பாட்டில்தான். தில்லை தீட்சதர்கள் தனி சாம்ராஜ்யம் நடத்துகிறார்கள். பல்வேறு வழக்குகள், படுகொலைகள், தற்கொலைகளோடு தொடர் புடையது தில்லை நடராசன் கோயில்.*

- கோயில் பார்ப்பனர் கொள்ளைகளை எதிர்த்து பக்தர்களே அரசு கட்டுப்பாட்டில் வரவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது வரலாறு. 1888இல் நீதிபதி முத்துசாமி அய்யர் மற்றும் பாஷ்யம் அய்யங்கார் கோயிலை அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்றும், அரசுக் கட்டுப்பாட்டில் வரக் கூடாது என்று எதிர்ப்பவர்கள், தண்டனைச் சட்டத்தை எதிர்க்கும் திருடர்களைப் போன்றவர்கள் என்றும் கூறினர். ('இந்து' ஆங்கில நாளேடு 13.1.2014 தலையங்கத்தில் இத்தகவலைப் பதிவு செய்துள்ளது)
- பனகல் அரசர் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்து 1927இல் அமுலுக்கு வந்த இந்து அறநிலையத் துறைச் சட்டத்தில் 1951இல் தமிழக முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜா ஒரு திருத்தம் கொண்டு வந்து தில்லை நடராசன் கோயில் நிர்வாகத்தை அரசு ஏற்கிறது என்ற அறிவிப்பை வெளியிட்டார் (28.5.1951). தீட்சதப் பார்ப்பனர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தனர்.
- வழக்கில் தீட்சதர்கள் வைத்த வாதம் தான் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 'கல் தோன்றி மண் தோன்றாத காலத்திலிருந்தே பிராமணர்களிலேயே தனிப் பிரிவான 'ஸ்மார்த்த' பிராமணர்களாகிய எங்கள் வசம் தான் கோயில் நிர்வாகம் இருந்து வருகிறது. நாங்கள் 'பிராமணர்களின்' ஒரு தனித்துவமான பிரிவினர் (religious demomination, one Section) அரசியல் சட்டத்தின் 26(அ) பிரிவு இந்தத் தனித்துவமான பிரிவினருக்கு சிறப்பு சலுகை அடிப்படை உரிமையாக வழங்கியுள்ளது என்று வாதிட்டார்கள். (இந்த தனித்துவமான பிரிவு அரசியல் சட்டத்தில் எப்படி நுழைக்கப்பட்டது என்பதை இதே இதழில் வேறு ஒரு பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.)
- 'ஸ்மார்த்தர்' என்ற பிரிவினர் கோயில் உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்கள் 'வேள்வி - நெருப்பு' என்ற 'யாக' வழிபாட்டை மட்டுமே செய்ய வேண்டும் என்பது அவர்களுக்கான சாஸ்திரம், காஞ்சி சங்கராச்சாரிகள் ஸ்மார்த்தப் 'பிராமணர்கள்' தான். ஆனாலும் கோயிலுக்கு சாஸ்திர சம்பிரதாயங்களை மீறி உரிமை கொண்டாடுகிறார்கள்.
- உயர்நீதிமன்றம் தீட்சதர்கள் கோரிக்கையை ஏற்று அரசு தலையிட முடியாது என்று 1951இல் தீர்ப்பளித்தது. தீட்சதர்கள் 'மடாதிபதிகளைப் போல' கருதத்தக்கவர்கள் (கவனிக்க: மடாதிபதிகள் அல்ல; அவர்களைப் போல) என்று தீர்ப்பளித்தது.
- உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அன்றைய தமிழ்நாடு அரசு (சென்னை மாகாண அரசு) 1954இல் உச்சநீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்தது. அரசியல் சட்ட அமர்வு முன் வழக்கு விசாரணைக்கு வந்தபோது இராஜாஜி தலைமையிலான அரசு திடீர் பல்டி அடித்து எதிர் வழக்காட

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## எல்லை மீறுகிறார் தமிழக ஆளுநர்

பாரதியார் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர்கள் மாநாடு ஒன்று நடைபெற்று இருக்கிறது. 100 க்கும் மேற்பட்ட தென் பகுதியைச் சேர்ந்த துணைவேந்தர்கள் அதில் பங்கேற்று இருக்கிறார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். இரவி ஆகியோர் சிறப்பு விருந்தினராக அதில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் மிகச் சிறப்பான சில கருத்துக்களை முன் வைத்திருக்கிறார். “பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டில் இயங்கும் போது அவை தமிழ்நாடு பாடத்திட்டத்தைத் தான் நடத்த வேண்டும். அது அறிவியல் மனப்பான்மையில் இருக்க வேண்டும். ஒன்றிய அரசு கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு அறிவியலுக்கு எதிரான பிற்போக்குத் தனமான கருத்துக்களை திணித்துக் கொண்டு இருக்கிறது. எனவே கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றியாக வேண்டும்” என்ற கருத்தை அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

இதற்கு மாறாக ஆளுநர் ஆர்.என் ரவி கூட்டாட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து சில கருத்துக்களை முன் வைத்திருக்கிறார். “இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு அல்ல. கூட்டமைப்புத் தத்துவம் இந்தியாவிற்குப் பொருந்தாது” என்று கூறியிருக்கிற ஆளுநர், அதற்கு கூறியிருக்கிற காரணங்கள் தான் மிகவும் விசித்திரமாக இருக்கிறது. “அமெரிக்கா போன்ற நாடுகளில் பல்வேறு தேசிய இன மக்கள் தங்களை இணைத்துக் கொண்டு ஒரு நாடாக மாற்றிக் கொண்டார்கள். அதே போல் உருவாக்கப்பட்ட நாடு அல்ல இந்தியா, இந்தியா என்பதே உண்மையிலேயே பாரதம் தான். 1947 ஆகஸ்டு 15 இல் இந்தியா பிறந்துவிடவில்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த பாரத தேசம் பிறந்துவிட்டது. இந்த பாரத தேசத்தில் வாழ்ந்த அனைவரும் ஒத்த உணர்வும், ஒத்த கலாச்சாரமும் கொண்ட மக்களாகவே இருந்திருக்கிறார்கள். எனவே இங்கு வெவ்வேறு இனங்களைக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள் அவர்களுக்குத் தனித்தனி மாநிலங்கள் இருக்கிறது, அவைகளை நாங்கள் கூட்டாட்சியாக மாற்றப் போகிறோம் என்று கூறுவது இந்தியாவிற்குப் பொருந்தாது” என்ற வாதத்தை ஆளுநர் எடுத்து வைத்திருக்கிறார்.

இந்த வாதத்தைக் கண்டு சிரிப்பதா அல்லது வியப்பதா என்று நமக்குப் புரியவில்லை. வாதத்திற்காகவே ஒப்புக் கொள்வோம். பலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாரதம் என்ற தேசம் இருந்தது என்று இவர் சொல்கிறார் என்றால் அந்த பாரத தேசத்திற்கு அரசியல் சட்டம் ஏதாவது இருந்ததா? அந்த பாரத தேசத்திற்கு நீதிமன்றங்கள் இருந்ததா ? அந்த பாரத தேசத்தில் காவல் நிலையங்கள் இருந்ததா ? இவர் சொல்லுகிற பல்லாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பு தொலைத் தொடர்பு சாதனங்கள் இல்லை, போக்குவரத்து வசதிகள் இல்லை. சொல்லப்போனால் மனிதன் பேசுவதற்கு மொழி கூட தோன்றவில்லை. மொழி தொடர்பு, தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதி இப்படி எதுவும் இல்லாத காலத்திலேயே அவர்கள் ஒரே கலாச்சாரத்தில் வாழ்ந்திருக் கிறார்கள். அது ‘பாரதீய கலாச்சாரம்’ என்று கூறுகிறார். இவர் கூறும் பாரத தேசத்தின் எல்லை எது என்று வரையறுப் பதற்கும் தயாராக இல்லை.

வருங்காலத்தில், அய்க்கிய நாடுகள் சபையில் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் எல்லைப் பிரச்சனை வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அங்கே இந்தியாவினுடைய பிரதிநிதி சென்று, “நாங்கள் பாரத தேசம், 3000 ஆண்டு களுக்கு முன்பே பாரதியர்களாக நாங்கள் வாழ்ந்தோம். அப்போதே எங்களுக்கு ஒருமித்த உணர்வும், கலாச்சாரமும் இருந்திருக்கிறது; எங்கள் தேசத்துக்கு எல்லை இல்லை என்று வாதிட்டால் உலகம் இந்த நாட்டைப் பார்த்து சிரிக்காதா? இப்படிப்பட்ட கருத்தை இவர் சொல்வதற்கு காரணம் என்ன? ஆர்.எஸ்.எஸ் இன் சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் தான் இந்தக் கருத்தைக் கூறினார். நம்முடைய மக்கள் முதாதையர் என்பவர்களுக்கு ஆதி அந்தம் எதுவுமே கிடையாது. இவர்கள் எப்பொழுது தோன்றினார்கள் என்று கூறவே முடியாது. உலகம் தோன்றிய காலத்திலுருந்து, கடவுள் தோன்றிய காலத்திலிருந்து நம்முடைய மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே தான் நமக்குத் தனிப்பட்டப் பெயர்கள் எதுவும் இல்லை. நம்மை எதிர்த்தவர்களுக்கு மிலேச்சர்கள் என்று பெயர் சூட்டப்பட்டது. நம்மை அடையாளப்படுத்துவதற்குத் தான் ஆரியர்கள் என்ற பெயரைத் தந்தார்கள். நாம் தான் இந்த நாட்டினுடைய மக்கள்” என்று கோல்வாக்கர் கற்பனையில் கட்டவிழ்த்துவிட்ட கட்டுக்கதையை ஒரு மாநில ஆளுநர், அரசியலமைப்புச் சட்டப்படி செயல்பட வேண்டியவர் கூறுகிறார்.

இந்தியா ஒற்றைத் தேசமே தவிர, கூட்டாட்சிகளுக்கான நாடு அல்ல என்கிறார் ஆளுநர் ரவி. பிரதமர் மோடி பெயரளவுக்குக் கூறிய ‘கூட்டுறவுக் கூட்டாட்சி’ (Cooperative Federalism) என்ற கருத்தைக்கூட ஆளுநர் ஏற்க மறுக்கிறார். இந்தியா மொழி வழி மாநிலமாகப் பிரிக்கப்பட்ட பிறகு ஒரு மாநிலத்தின் ஆளுநராக பதவிக்கு வந்தவர் அரசியல் சட்டத்துக்கு எதிராக ‘பாரதம்’ என்ற ஆர்.எஸ்.எஸ். கட்டுக் கதையைப் பேசுவது வன்மையான கண்டனத்துக் குரியது.

ஆர்.எஸ்.எஸ். ஊதுகுழலாகப் பேசுவதை தமிழ்நாடு ஒருபோதும் சகிக்காது. ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்ற போராட்டம் வெடிக்கும் சூழலை ஆளுநரே உருவாக்கி வருகிறார்.

# 4139 சட்டமன்ற உறுப்பினர்களில் பா.ஜ.க. எண்ணிக்கை 1516 மட்டுமே!

உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் நடந்து முடிந்த தேர்தல்களில் பாஜக எப்படி வெற்றி பெற்றிருக்கிறது என்று தேர்தலுக்குப் பிறகு வந்த ஆய்வுகள் தெளிவு படுத்தி இருக்கின்றன. இது குறித்து 12.03.2022 ஆங்கில இந்து நாளேடு விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. மத அடிப்படையில் மிக எளிதாக மக்களை அணிதிரட்டக் கூடிய வாய்ப்புகள் இருந்ததே அடிப்படையான காரணம். இந்த மத அணி திரட்டலுக்கு ஜாதி ஜாதியாக தனித்தனி பிரிவாக அணிதிரட்ட முடிந்ததும் ஒரு அடிப்படையான காரணம் என்று அந்த ஆய்வு கூறுகிறது. அதுமட்டுமின்றி மோடி ஆட்சிக்கு இந்த மாநிலங்களில் செல்வாக்கு இருக்கின்றது, மாநிலங்களில் உள்ள தலைவர்களை விட மோடி ஆட்சி மேல் அதிக நம்பிக்கை இருக்கிறது. குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பல சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அந்தத் திட்டங்களை நேரடியாக மக்களுக்கு வழங்காமல் அதற்கான பணத்தை நேரடியாக அனுப்பி வைத்ததும் ஒரு முக்கிய காரணம் என்றும் ஆய்வு கூறுகிறது. ஆனாலும், உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் போன்ற மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்றுவிட்டதனால் நாடே பாஜகவின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக சில ஏடுகள் கற்பனையில் செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் உண்மை அதுவல்ல.

நாட்டில் உள்ள 29 மாநிலங்களில் 10 மாநிலங்களில் மட்டுமே பாஜக தற்போது ஆட்சியில் இருக்கிறது. பாஜக முற்றிலுமாக துடைத்து எரியப்பட்ட மாநிலங்களும் இருக்கின்றன. சிக்கிம், மிசோராம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பாஜகவிற்கு ஒரு இடம் கூட கிடையாது, வெறும் பூஜ்ஜியம் தான். ஆந்திராவில் 175 சட்டமன்ற தொகுதிகளில் வெறும் 4 தான் பாஜக. கேரளாவில் 140 இல் 1 தான் பாஜக. பஞ்சாபில் 117 சட்டமன்றத் தொகுதிகளில் 3 தான் பாஜக. உத்தரகாண்டில் 294 சட்டமன்ற தொகுதிகளில் 3 தான் பாஜக. தெலுங்கானாவில் 119 சட்டமன்ற தொகுதிகளில் 5 தான் பாஜக. டெல்லியில் 70 சட்டமன்ற தொகுதிகளில் 8 தான் பாஜக. ஒரிஸ்சாவில் 147 சட்டமன்ற தொகுதிகளில் 10 தான் பாஜக. நாகாலாந்தில் 60 சட்டமன்ற தொகுதிகளில் 12 தான் பாஜக.

பாஜகவின் கூட்டணியில் பாஜக ஆளுகின்ற மாநிலங்களில் பாஜகவின் நிலை என்ன ? மேகாலயாவில் பாஜகவின் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. அங்கு 60 சட்டமன்ற தொகுதிகளில் 2 தான் பாஜக. பீகாரில் 243 தொகுதிகளில் 53 தான் பாஜக. ஜம்மு காஷ்மீரில் 87 சட்டமன்ற தொகுதிகளில் 25 தான் பாஜக. மொத்தமுள்ள 4139 சட்டமன்ற உறுப்பினர்களில் இந்தியா முழுவதும் பாஜகவின் எண்ணிக்கை 1516 தான். இந்த 1516 ம் கூட உ.பி, இராஜஸ்தான், கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில் மட்டும்தானே தவிர மற்ற மாநிலங்களில் இல்லை. 66% இடங்களில் இந்தியாவில் பாஜக தோல்வி முகத்தில் தான் உள்ளது. இந்த உண்மைகளை ஊடகங்கள் முற்றிலுமாக மறைத்துவிட்டு பாஜக வெற்றி கொடி கட்டி பறக்கிறது. அடுத்த ஆண்டும் அது தான் ஆட்சி அமைக்கப் போகிறது என்று பொய்யான கற்பனை செய்திகளை பரப்பிக் கொண்டிருக்கின்றன. உத்திரப் பிரதேசம், கோவா போன்ற மாநிலங்களில் நடந்து முடிந்த தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் வலிமையாக காலூன்றும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மத அடிப்படையிலான அணிதிரட்டல்களுக்கு எதிராக சமூக நீதிக் கோட்பாடுகளை, மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சனைகளை முன்னெடுத்து மக்களை அணிதிரட்ட வேண்டிய பொறுப்பு உள்ளது. தமிழ்நாட்டு மாடல், திராவிடன் மாடலை பின்பற்றினால் அங்கு நிச்சயம் பாஜவை வெல்ல முடியும் என்பது தான் முடிந்த தேர்தல்கள் உணர்த்தியிருக்கிற செய்தி.

# சூர்யா திரைப்படம் பா.ம.க. மிரட்டலுக்கு பதிலடி

செஞ்சி பாலசரவணா திரையரங்கில் 9.3.2022 அன்று நடிகர் சூரியா நடித்த எதற்கும் துணிந்தவன் திரைப்படத்தை வெளியிடக் கூடாது என்று பா.ம.கவினர் கடிதம் மூலம் மிரட்டல் விடுத்தனர். கடிதத்தை திரையரங்க உரிமையாளர் காவல்துறைக்கு அனுப்பி உள்ளார் . மறுநாள் 10.03.2022 பா.ம.கவினர் திரைப் படம் திரையிடக்கூடாது



என்று ஆர்ப்பாட்டம் நடத்தினர் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திரையரங்கிற்கு ஒருநாள் பாதுகாப்பாக காவல்துறையினர் இருந்தனர். படம் பார்க்க வந்த ரசிகர்கள் மற்றும் மக்கள் ஏமாற்றத்துடன் சென்றனர்.


பா.ம.கவினர் தொடர் மிரட்டலால் திரைப்படம் வெளியிடவில்லை. 11.03.2022 அன்று அம்பேத்கர் மக்கள் கட்சி மழைமேனிபாண்டியன், படம் பார்க்கச் சென்று கேட்டபோது நடந்த நிகழ்வுகளை சொல்லி படம் வெளியிட முடியாது என்றனர். அ.ம.கட்சியினர் வெளியிட சொல்லி கோசங்களை எழுப்பினர். நியூஸ் செவன் தொலைக்காட்சிக்கு அ.ம.கட்சி மழை மேனி பாண்டியன் பேட்டியளித்தார்.

இந்த தகவலறிந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் பெரியார் சாக்ரடீஸ் அரசியல் கட்சிகள் இயக்கங்களை ஒருங்கிணைத்து ஆலோசனை கூட்டத்தை நடத்தினார். கருத்து சுதந்திரம் சமூகநீதி கூட்டமைப்பில் தி.மு.க. துரைதிருநாவுக்கரசு, ம.தி.மு.க.துணைப் பொதுச் செயலாளர் ஏ.கே.மணி. திராவிடர் கழகம் கோபண்ணா, அம்பேத்கர் மக்கள் கட்சி தலைவர் மழைமேனிபாண்டியன் , வி.சி.க.மகிழ்வரசு, மனிதநேய மக்கள் கட்சி அலிகான், அஷ்ரப், சி.பி.எம். மாதவன். சகாதேவன், பொதுவுடமை செல்வராசு, பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் ஆல்பர்ட், மக்கள் ஜனநாயகக் குடியரசு கட்சித் தோழர்கள் வையவன், சக்திவேல், விஜய் மக்கள் இயக்கம் குணாசரவணன் ஆகியோர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கூட்டமைப்பில், 1. திரையரங்க உரிமையாளரை சந்தித்து திரைப்படத்தை வெளியிட வேண்டும்; 2. காவல்துறை மாவட்ட துணைக்கண்காணிப்பாளரைச் சந்தித்து பா.ம.கவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; 3. சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் அவர்களைச் சந்தித்து தடை செய்யப்பட்டுள்ள திரைப்படத்தை வெளியிட வலியுறுத்த வேண்டும் என்றும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டமைப்பு தோழர்கள் திரையரங்க உரிமையாளரையும் அமைச்சர் கே.எஸ். மஸ்தானைச் சந்தித்து திரைப்படத்தை வெளியிட வேண்டும் என்று கடிதம் வழங்கிய போது அமைச்சர் திரைப்படம் வெளியிட சொல்வதாக உறுதியளித்தார்.

## வழி மறுக்கும் மதம்



மதத்திற்கும் - உலக இயற்கைக்கும் எப்போதும் சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில், அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழி மறைத்து திருப்புவதையே ஜீவநாடியாய்க் கொண்டிருக்கின்றன. அதனால் மதம் கலந்தபடியால் இயற்கை அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய்விடுகின்றது. எப்படி எனில், மதங்கள் என்பவை எல்லாம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்தே காணப்படுபவை ஆகும்.

குடி அரசு 27.09.1931

### ‘காதலர் நாளில்’ மனநல மருத்துவர் சிவபாலன் விளக்கவுரை (2)

# சகிப்புத் தன்மையில்தான் குடும்ப வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது

***வாழ்க்கையில் விட்டுக் கொடுத்துப் போவது என்பதால் பிரச்சினைத் தீராது; சகித்துக் கொள்ளும் மனப்பான்மையில் தான் வாழ்க்கையின் வெற்றியே அடங்கியிருக்கிறது என்பதே உளவியல் ஆய்வாளர்களின் முடிவு என்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய காதலர் நாள் (பிப். 14, 2022) விழாவில் மருத்துவர் சிவபாலன் விளக்கினார்.***

வீட்டில் ஏற்பாடு செய்யும் திருமணங்களைவிட, காதல் திருமணங்களில் ஏன் அதிக சிக்கல்கள் வருகிறது? ஏன் காதலித்து திருமணம் செய்தவர்கள் நீதிமன்றங்களில் அதிகமாக விவாகரத்திற்கு வருகிறார்கள்? வீட்டில் ஏற்பாடு செய்த திருமணங்களில் பிரச்சனை என்றால், பெற்றோர்கள் பொறுப்பை எடுத்துக் கொள்கிறார்கள். “நாங்கள் பார்த்து திருமணம் செய்து வைத்தது தானே, கல்லானாலும் கணவன் தானே சகித்துக் கொண்டு வாழ்க்கையை நடத்து” என்று பொறுப்பை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், காதல் திருமணங்களில் பிரச்சனை வந்தால், ‘நீ பார்த்து தேடிய மாப்பிள்ளை தானே, நீ தானே எங்களை எதிர்த்து திருமணம் செய்தாய், நீயே பார்த்துக் கொள்’ என்று கூறிவிடுவார்கள். எனவே பெற்றோர்களிடம் ஆதரவு இல்லை. கணவரிடமும் முரண்பாடு, ஆதலால் ஒரு ஏமாற்றம் ஏற்படுகிறது. விவாகரத்தும் அதிகமாகிறது. விவாகரத்திற்கு வருகிறவர்கள் கூறுவார்கள், ‘காதலிக்கும் போது பேசிக் கொண்டே இருப்பான். ஆனால் இப்போது பேசுவதே இல்லை. பத்து நிமிடம் பேச கூட நேரமில்லை’ என்று கூறுவார்கள். எனவே ஒரு முன் முடிவோடு திருமண வாழ்க்கையில் ஈடுபடுவதால் அதிகமான ஏமாற்றங்கள் ஏற்படுகிறது.

காதலிக்கும் போது இருந்தவைகளை, திருமணத்திற்குப் பிறகும் எதிர்பார்ப்பது தவறு. திருமணத்திற்குப் பின் அதிக பொறுப்புகள் உண்டாகும். அந்த குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். குழந்தை இருந்தால் குழந்தையை வளர்க்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் குழந்தை வளர்ப்பது தான் மிக முக்கியமான விடயம். இவ்வளவு சிக்கல்களுக்கிடையில் நீங்கள் காதலிக்கும்போது எப்படி இருந்தீர்களோ அப்படியே இருக்க முடியாது. எனவே காதல் திருமணங்களில், ‘அதிக எதிர்பார்ப்புகளோடு திருமண வாழ்வில் ஈடுபடுவது ஒன்று, மற்றொன்று வெளியில் இருந்து அதாவது பெற்றோரின் ஆதரவு இல்லாமல் இருப்பது’ இவைகள் தான் காதல் திருமணங்களில் விவாகரத்து ஏற்பட முக்கிய காரணங்களாக இருக்கிறது.

எனவே, திருமணம் என்றாலே சிக்கல்கள் வரத்தான் செய்யும். என்னிடம் வருபவர்கள் கேட்பார்கள், பிரச்சனையே இல்லாமல் வாழனும் என்று, அதற்கு இறந்தால் தான் முடியும் என்பேன். வேறு வழி இல்லை. பிரச்சனைகள் வரத்தான் செய்யும், அதை எப்படி சமாளிக்கிறோம், அதை எப்படி அணுகுகிறோம், அந்த பிரச்சனையை சமாளிக்க எந்த அளவிற்கு தயாராகிறோம், அந்த பிரச்சனைக்கு எந்த அளவிற்கு நீ தான் காரணம் என்பதை உணருகிறாய் என்பது



தான் முக்கியம். இதை பெரும்பாலும் செய்வதே இல்லை. ஒரு பிரச்சனை வந்தது என்றால் பரஸ்பரமாக குற்றச்சாட்டுகளோடு பூசி மொழுகி விடுகிறோம். மற்றவர் மீது குற்றச்சாட்டை சுமத்தி, குற்றச்சாட்டுகளின் வழியாகவே அணுக பார்க்கிறோம். ஒரு பிரச்சனை வருகிறது என்றால் அதற்கு நான் எப்படி பொறுப்பு என்பதை உணர வேண்டும். ஒரு பிரச்சனையை நாம் நம்மிடமிருந்து தான் அணுக வேண்டும். அப்போதுதான் அதை தீர்க்க முடியும். இவைகள் தான் காதல் திருமணங்களில் வரும் சிக்கல்கள்.

பிரச்சினைகளோடு எங்களிடம் வரும் இணையர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவது வழக்கம். இதில் யார் பக்கம் தவறு இருக்கிறது என்று ஆராய்வதில் எந்தப் பயனும் இல்லை; பிரச்சினை அவர்களிடம் இல்லை; அவர்களின் உறவுகளில் இருக்கிறது;

- **காதல் உறவில் இருக்கும்போது வெளிப் படுத்திய உணர்வுகளைக் குடும்ப வாழ்க்கைக்கு வந்த பிறகு எதிர்பார்க்கக் கூடாது.**
- **பிரச்சினையே இல்லாத வாழ்க்கை எதுவும் கிடையாது; அதற்கு மரணிக்கத்தான் வேண்டும்.**
- **கணவன்-மனைவி ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறாக்ள்; இதில் பிரச்சினை, அந்த மனிதர்களிடம் இல்லை; அவர்களின் உறவுகளில்தான் இருக்கிறது.**

எனவே அதைக் கண்டறிந்து சரி செய்ய வேண்டும்.

நாம் என்ன உணர வேண்டும் என்றால், நாம் காதலித்தோம் தான். அந்த காதல் என்பதே பெரியதாக ஒன்றும் இல்லை. அதுவே ஒரு கட்டுக்கதை தான். அது எந்த வகையிலும் நாம் தற்போது வாழும் வாழ்க்கைக்கு உபயோகரமானதாக இருக்காது. அதை நினைத்தோமென்றால் தற்போது வாழும் வாழ்க்கையை மேலும் சிக்கலாகத்தான் மாற்றும் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, இது முழுவதும் என்னோட பொறுப்பில் நான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை, இதில் வரும் ஒவ்வொரு சிக்கலையும் நானாகத் தான் தீர்க்க வேண்டும். வெளியில் இருந்து யாரிடமும் ஆதரவு கேட்கக் கூடாது என்றால், ஒவ்வொரு காரியத்தையும் பொறுப்புடனும், ஆராய்ந்தும் செய்ய வேண்டும். ஒவ்வொன்றி லும் நமது பக்கம் என்ன தவறு உள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். இதில் உறவுமுறை தான் மிக முக்கியமான ஒன்று. இதற்காக நாம் சில விடயங்களை செய்தாக வேண்டும். அது சினிமாவில் கூறுவது போல விட்டுக் கொடுப்பது அல்ல. சகித்துக் கொள்ள வேண்டும். சகிப்புத் தன்மை தான் மன வாழ்க்கையில் மிக முக்கியமான விடயம். உலகில் உள்ள அனைத்து ஆய்வுகளின்படி, திருமண வாழ்க்கையின் வெற்றி சகிப்புத் தன்மை தான் என்று கூறுகிறது. “எங்கேயும் விட்டுக் கொடுப்பதால்” என்று கூறவில்லை.

எனவே உறவு வேண்டும் என்றால் சகிப்புத் தன்மை வேண்டும். சகிப்புத் தன்மைக்கு புரிதல் மிக முக்கியமான ஒன்று. என்ன புரிதல் வேண்டும் ? உள்ளதை உள்ளபடியாக புரிந்து கொள்வது. எடுத்துக்காட்டிற்கு, ஒருவரை நாம் எப்படி எதிர்பார்க்கிறோமோ அப்படியே நாம் கற்பனை செய்து கொள்கிறோம். ஆனால் உண்மையில் அவர் அப்படி இல்லையென்றாலும், நாம் ஏற்றுக்கொள்ளாமல் நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொண்டோம் என்றால் அது சரியான புரிதலாக இருக்காது. அவர் எப்படி இருக்கிறாரோ அப்படிப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரிடம் சில பலமும் இருக்கும், பலவீனமும் இருக்கும். பலவீனம் இருப்பதால் தூக்கி எறிந்து விடக்கூடாது. அவரிடமிருந்து அந்த பலங்கள் (Positives) வேண்டுமென்றல், பலவீனங்களை (negatives) ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு பலவீனங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் இதை நீ மாற்றிக் கொள் என்று இறுதி வரை கூறிக்கொண்டே இருக்கக் கூடாது. காதலிக்கும் போது அப்படி இல்லையே, திருமணத்திற்குப் பிறகு தான் இப்படி என்று எண்ணினால் இது தவறு. காதலிக்கும் போது நடித்துள்ளார்கள். திருமணத்திற்குப் பிறகு தான் உண்மை புரிந்துள்ளது. எனவே முதலில் புரிந்து கொள்ள வேண்டும், இரண்டாவது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், மூன்றாவது சகித்துக் கொள்ள வேண்டும். இதை நான் எளிமையாக கூறிவிட்டேன். செய்வது கடினம் தான்.

இவையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால் **Intellectual (அறிவாளியாக) ஆக இருக்க வேண்டும். உணர்ச்சிப் பூர்வமாக (emotional) அணுகக் கூடாது. உணர்வுப்பூர்வமாக எந்த ஒரு விடயத்தைப் பார்த்தாலும் அதனால் நிறைய ஏமாற்றங்கள் தான் ஏற்படும். எனவே பிரச்சனைகளை அறிவுப் பூர்வமாக உள்ளதை உள்ளபடியே உணர்ந்து, புரிந்து, ஏற்றுக் கொண்டு, சகித்துக் கொண்டு இருக்க முடியுமென்றால் ஒரு சிறப்பான வாழ்க்கையை வாழ முடியும். அப்படி வாழ்ந்தால் மிகச் சிறந்த தம்பதிகளாக இருக்க முடியும்.**

ஆனால் அந்த புரிதலுக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பது தான் கேள்வி ? இதில் எந்த புனிதப் படுத்துதலும் வரக்கூடாது. எங்களை போல உலகத்தில் யாருமே இல்லையென்று கூறவும் கூடாது. அது பொய் என்று உங்களுக்கே தெரியும். இப்படி எல்லாம் இல்லாமல், உணர்ச்சிவசப்படாமல், புனிதப் படுத்தாமல் அறிவுப் பூர்வமாக ஒரு உறவை அணுகுவதால் பக்குவப்பட்ட, முதிர்ச்சியான உறவாக, ஒரு உறவை நீடித்து வைத்திருக்க முடியும் என்றார், சிவபாலன். நிறைவாக சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஆயக்குடியில் பெரியாரியல் கொள்கை விளக்கக் கூட்டம்

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆயக்குடி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் 11-3 - 2022 அன்று புது ஆயக்குடி அரிசி ஆலை பகுதியில் உள்ள வ.பழனிச்சாமி நினைவுத் திடலில் மாலை 6 மணி அளவில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு புது ஆயக்குடி பகுதி தோழர் வே.சங்கர் தலைமை வகித்தார். ஒட்டன்சந்திரம் தங்கவேல் முன்னிலை வகித்தார். நிகழ்வின்தொடக்கமாக ஆயக்குடி பகுதி பொறுப்பாளர் சு.அழகர்சாமி மந்திரமா? -தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தி, சாமியார்கள் செய்வது மந்திரமல்ல மக்களை ஏமாற்றும் தந்திரமே என்று செய்து காட்டினார்.

அதனைத் தொடர்ந்து கரூர் மாவட்ட தோழர் சண்முகம், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தொழில் முனைவோர் மோடியின் ஆட்சியில் சந்திக்கும் இடர்களை குறித்து விளக்கினார். தொடர்ந்து உரையாற்றிய கழக பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் தவறான கொள்கைகளால் விவசாயிகள் படும் வேதனைகளையும், விளக்கினார். அடுத்து உரையாற்றிய அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி ஆயக்குடியின் அரசியல் பங்களிப்பையும் , இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெற ஆயக்குடி மக்கள் நடத்திய போட்டி தேர்வு பயிற்சி வகுப்பு குறித்தும் விவரித்தார்.

நிறைவாக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் அவர்கள் தற்போதைய நிலையில் பாசிச பாஜகவின் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் பெரியாரி யத்தின் தேவைகளையும் எடுத்து கூறினார். நிகழ்வில் மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் கணக்கன், செயலாளர் சிவானந்தம், கரூர் மாவட்ட தோழர் வடிவேல் ராமசாமி, அரவக்குறிச்சி பகுதியை சார்ந்த குமரேசன், திருப்பூர் அய்யப்பன் மற்றும் ஆயக்குடி பகுதி கழகத் தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இயக்க வெளியீடுகள் ரூபாய் 1000 ற்கு விற்பனையானது.கொரான காலத்திற்கு பின்பு நடைபெற்ற பொதுக் கூட்டம் என்பதால் தோழர்கள் . பொதுக் கூட்ட ஏற்பாட்டை மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்

**செய்தி : அய்யப்பன்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லை என்று அறிவித்தது. இதனால் மேல் முறையீடு உச்சநீதி மன்றத்தில் தள்ளுபடியானது.

- 1959இல் தமிழக அரசின் அறநிலையத்துறை சட்டம் மீண்டும் திருத்தப்பட்டது. காமராசர் முதல்வராக இருந்தார். தில்லை நடராசன் கோயில் தீட்சதர் கட்டுப்பாட்டில் நீட்டிக்க சட்டம் வழி செய்தது.
- 1987இல் நகைகள் மற்றும் உண்டியல் பணத்தை பங்கு போடுவதில் தீட்சதர்களுக்குள் மோதல் ஏற்பட்டு நீதிமன்றம் போகிறார்கள். 1987இல் நிர்வாகத்தில் தீட்சதர்களுக்கு உதவி செய்வதற்காக தமிழ்நாடு அரசு (அ.இ.அ.தி.மு.க. ஆட்சி) ஒரு நிர்வாக அதிகாரியை நியமித்தது (கவனிக்க - அறநிலையத் துறை கோயிலை தனது கட்டுப்பாட்டில் எடுக்கவில்லை. நிர்வாக அதிகாரி மட்டுமே நியமிக்கப்படுகிறார்). இதையும் எதிர்த்து தீட்சதர்கள் நீதிமன்றம் சென்று தடை வாங்கி விடுகிறார்கள்.
- தொடர்ந்து தில்லை கோயிலில் தேவாரம் தமிழ்ப் பாடல் பாட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து ஆறுமுகசாமி என்ற சிவனடியார், சிற்றம்பல மேடையில் பாடுகின்றார். தீட்சதர்கள் மறுக்கிறார்கள். ஒரு கட்டத்தில் வயது முதிர்ந்த ஆறுமுகசாமி இரத்தம் சொட்ட அடித்து வெளியே தள்ளுகிறார்கள். ‘மனித உரிமை பாதுகாப்பு மய்யம்’ என்ற அமைப்பு இந்தப் பிரச்சினையை கையில் எடுத்துப் போராடுகிறது.

  “தமிழில் பாட அனுமதிக்க வேண்டும்; தீட்சதர்கள் தனித்துவமான பிரிவினர் என்று உரிமை கோருவதில் உண்மையில்லை; கோயிலை அரசு ஏற்க வேண்டும்” என்று நீதிமன்றத்தில் இந்த அமைப்பு வழக்கு தொடர்ந்தது.
- வழக்கை விசாரித்த நீதிபதி பானுமதி, தீட்சதர்கள் தனி உரிமை கோருவதைவிட தமிழில் பாட வேண்டும் என்ற வழிபாட்டு உரிமையையே முதன்மையாகக் கருத வேண்டும் என்று கூறி நீதிபதி பானுமதி தீர்ப்பளித்தார்.
- தீட்சதர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். சுப்பிரமணியசாமி, தீட்சதர் களுக்காக மனு போட்டார். முதல்வராக இருந்த ஜெயலலிதாவை தீட்சதர்கள் நேரில் சந்தித்தனர். எனவே தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்களும் மறைமுகமாக தீட்சதர் ஆதரவு நிலைப்பாட்டையே எடுத்து வழக்கை பலவீனமாக்கி தீட்சதர்கள் வெற்றி பெற உதவினர். “தீட்சதர்கள் நிர்வாக சீர்கேடு பற்றி புகார்கள் இருந்தாலும் நீதிமன்றம், அதற்குள் போக விரும்பவில்லை. நிர்வாக அதிகாரியை நியமித்தது சரியல்ல; அதற்கான குறிப்பான காரணமும் கூறப்படவில்லை; சீர்கேடுகளை சரி செய்ய நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டார் என்றால், அதை சரி செய்துவிட்டு அதிகாரி பதவி விலகியிருக்க வேண்டும். தீட்சதர்களுக்குத்தான் கோயில் உரிமையுடையது” என்று தீர்ப்பளித்தது உச்சநீதிமன்றம்.
- 1954இல் ராஜாஜி முதல்வராக இருந்தபோது குமாரசாமி ராஜா, கோயிலை அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நிறைவேற்றிய உத்தரவை திரும்பப் பெற்றார். அதேபோல் ஜெயலலிதா - எம்.ஜி.ஆர். ஆட்சியில் அறநிலையத் துறை அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் நியமித்த ‘நிர்வாக அதிகாரி’ நியமனத்தை நீக்குவதற்கு துணை நின்றார். இரண்டு பார்ப்பன முதல்வர்களும தீட்சதர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டனர்.
- சோழ மன்னர்களால் கட்டப்பட்ட இந்தக் கோயில், நாயக்கர் மன்னர்களால் நிர்வகிக்கப் பட்டது. பிச்சாவரம் ஜமீன்தார் கட்டுப்பாட்டி லும் இருந்திருக்கிறது. கோயில் மூடப்பட்டப் பிறகு ஒவ்வொரு நாளும் கோயில் சாவியை பிச்சாவரம் ஜமீன்தாரிடம் சென்று தீட்சதர்கள் கொடுக்கும் வழக்கம் நீண்டகாலம் பின்பற்றப் பட்டு வந்தது.

**(தகவல்: மருதையன் எழுதிய ‘ஆகமம் ஆலயம்; மக்களும் நீதியும்’ நூலிலிருந்து)**

# பெரியார் பெருந்தொண்டர் இனியன் பத்மநாதன் 95ஆவது அகவை நாள் விழா




திவிக ஈரோடு தெற்கு மாவட்ட ஆலோசகரும், பெரியாரின் பெருந் தொண்டரும், பெரியார் விருதாளருமான இனியன் பத்மநாதன் 95 ஆவது அகவை நாள் விழா, திவிக ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக 06.03.2022 ஞாயிறன்று மகிழ்வும், நெகிழ்வும் சூழ கொண்டாடப்பட்டது.

விழாவின் வரவேற்புரை யை மாவட்ட அமைப்பாளர் பெ.கிருஷ்ணமூர்த்தி வழங்க கழகத்தின் மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாநில அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் இதுபோன்ற நிகழ்வின் அவசியத்தையும், மூத்த கழகச் செயல்பாட்டாளர்களை அடையாளங்கண்டு அவர்களை போற்ற வேண்டியது பற்றியும் உரையின் வழியே பகிர்ந்து கொண்டார்கள்.

மாவட்டச் செயலாளர் யாழ் எழிலன், ஈரோடு வடக்கு மாவட்ட நிர்வாகிகள் நாத்திகஜோதி, வேணுகோபால், வேல்முருகன், ராசிபுரம் பிடல் சேகுவேரா, சுமதி, விருதுநகர் செந்தில், கடலூர் போதி சத்வா, திருப்பூர் தனபால், திமுக தொழிற் சங்கத்தைச் சார்ந்த இராவணன் உள்ளிட்ட பிற மாவட்டக் கழகத் தோழர்களும் வருகை தந்து இனியன் பத்மநாதன் அய்யா அவர்களை வாழ்த்தினர்.

பின் தெற்கு மாவட்டத் தோழர்கள் ஆளுயர மலர் மாலை அணிவிக்க, சத்தியமூர்த்தி, மணிமேகலை, ரங்கம்பாளையம் கிருஷ்ணன், பிரபு, கணேசன், சென்னிமலை கதிர், இனியவன், சாரதி, கரூர் சண்முகம், வடிவேல் ஆகியோர் பயனாடை அணிவித்து தங்கள் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

பிறகு இவ்விழாவிற்கு தலைமையேற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மூத்த தோழர்கள் பலரை நினைவுபடுத்தியும், அவர்கள் பெரியாரியல் கொள்கை வளர ஆற்றிய அருந்தொண்டுகளையும், பல்வேறு வரலாற்று செய்திகளுமென ஒரு நிறைவான சிறப்புரையைத் தந்து வாழ்த்தி அமர்ந்தார். விழா குறித்தும், தம் தந்தையரின் செயல்பாடு பற்றியும் ஓர் உணர்வுப்பூர்வமான உரையினை விழா நாயகரின் மகளான தோழர் வசந்தி வழங்கினார்.

இறுதியாக நிறைந்த மனதோடும் தளுதளுத்தக் குரலோடும் தாம் பெரியாரின் மீதும், அவர்தம் கொள்கை மீதும் கொண்ட பற்றையும் பெரியார் அவர்களோடு தனது பயணத்தையும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீதான தாம் வைத்திருக்கும் அளவற்ற அன்பையும், மரியாதையையும் தோழர்கள் அறிந்திடும் வண்ணம் உணர்வுமிகு ஏற்புரையை வழங்கி அனைவருக்கும் தன் நன்றியினை தெரிவித்தார் பெரியார் பெருந்தொண்டர் இனியன் பத்மநாதன்.

ஆசிரியர் சிவக்குமார் நன்றியுரையோடும், பிரியாணி விருந்தோடும் விழா இனிதே நிறைவுற்றது.!

## சுயமரியாதை எங்கே?

கடவுளை வணங்குவதும்/ மறுப்பதும் தனி மனித உரிமை. So called (ஆ)சாமியார்கள் சந்திப்பதும் தனி மனித விருப்பம். ஆனால் எக்காரணத்தை கொண்டும் சுயமரியாதை இழக்க வேண்டாம். பெரியார், அண்ணா, கலைஞர் அவர்களுக்கு நாம் செலுத்தும் குறைந்தபட்ச மரியாதை நம் சுயமரியாதையைக் காப்பதே.



**மருத்துவர் செந்தில்,**
**திமுக நாடாளுமன்ற உறுப்பினர்**
**– முக நூலிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th March 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN